நீங்கள் என்ன கிளப்பப் போகிறீர்கள் என்று சொல்லவில்லையே (குறுக்கீடு) அது பாயின்ட ஆப் ஆர்டரில் வராது. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள் (குறுக்கீடு) விதியைப் படித்து தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையின் நடவடிக்கையிலிருந்து எழ வேண்டும். அவை நடவடிக்கை எதுவும் விவாதிக்கப்படவில்லையே. உட்காருங்கள் (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். நான் அதற்கு வழி சொல்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 55 (6)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒரே நாளில் இரண்டிற்கு மேற்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வரக்கூடாது என்றுள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 55 (6)-ஐ இன்றும் மற்றும் இக்கூட்டத் தொடர் முழுவதும் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை வேளச்சேரிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான கிராம சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் அரசுக்கு தெரியாமல் சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்ததால், ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.